மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதைப் பற்றி மிக ஆவலாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நடப்பது நடக்கட்டும். அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்.

(இ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நாங்கள் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம். அதைத் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி இருக்கிறீர்கள். சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக் கல் கல்லூரி ஆகியவற்றில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று என்றுதான் கேட்க வேண்டுமே தவிர அதன் விவரங்களைச் சொல்லக் கூடாது. ஆகவேஇந்தப் பிரச்சினை சனிக்கிழமை இங்கே எழுப்பப்படலாம். அநேகமாக வந்தாலும் வரலாம், அந்த நம்பிக்கையோடு அவர்கள் அமரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

அரசியலமைப்பு 45வது திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்பது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய பேரவைவிதி 13(2)-ன்படி 'அரசின்சட்டமுன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப் பெறும் தீர்மானத்திற்கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளி வைக்கப்பெறலாம்'' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஆளுநர் உரை மீதான விவாதம் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொடுத்து இருக்கிறேன் அதற்கு உங்க ளுடைய அனுமதி கோருவதற்கு முன்பு ஒரு பிரச்சினை இருக்கிறது. விவாதத்திற்கு ஒரு பிரச்சினை இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால், அது குறித்து தனி நபர் தீர்மானம் கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும், இப்போது "ரிசர்வேஷன் ஆப் சீட்ஸ் பார் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்'' ஒரு சட்டம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியில் என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள். பொருளுக்குள் போக வேண்டாம். பொருள் குறித்த விவாதம் அவசியம் இல்லை.

1980 பிப்ரவரி 6]

திரு. அ. ரகுமான்கான்; 45-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கும், மலை ஜாதியினருக்கும் இன்னும் 10 ஆண்டுக் காலத்திற்கு இட ஒதுக்கீடு தொடர்ந்து தரவேண்டும் என்று சொல்லி, ஒரு மசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, நம்முடைய சட்டசபையின் ஒப்புதலுக்காகவும் இங்கே டேபிளில் வைத்து இருக்கிறார்கள். அதை நம்முடைய சட்டசபை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்போகிறதா? ஏனென்றால், உத்திரப்பிரதேச முதலமைச்சர் அதை விவாதிக்க விருப்பம் இல்லை என்று தெரிவித்து இருக்கிறார். மகாராஷ்டிரத்திலும் அந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்கு ஏதோ தெரியாமல் இருக்கிற மாதிரி உறுப்பினர் பேசிக் கொண்டு இருப்பது சரியல்ல. இந்த விதியின் கீழ் இந்தப் பிரச்சினையை நான் கொண்டு வரவிரும்புகிறேன் என்று சொல்லுங்கள், அது போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) நானே விதிகளைப் படித்துக் காட்டி விடுகிறேன். இங்கே விவாதம் செய்ய அனுமதிக்க முடியாது. அந்தப் பொருளுக்குள் போகக் கூடாது. (குறுக்கீடு) விதியைச் சுட்டிக்காட்டிச் சொல்லுங்கள் போதும்.

திரு. அ. ரகுமான்கான்: ஆளுநர் உரை நடந்து கொண்டு இருக்கிறபோது, அந்த விவாதத்தைத் தள்ளி வைப்பதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. அப்படி விதி இருக்கிற காரணத்தால் அது போன்ற ஒரு ரேட்டிபிகேஷன், ஒரு ரெசல்யூசன் கொண்டு வருகிறபோது, அப்படி ஒரு தீர்மானம் கொடுக்கலாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அப்படிக் கொடுத்து இருக்கிறார்களா? இல்லையென்றால், தயவு செய்து உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்; தீர்மானம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிகழ்ச்சி நிரலில் எது அவசியம், அவசரம் என்பதைப் பார்த்து சேர்க்கின்ற உரிமை பேரவைத் தலைவருக்கு உண்டு. நீங்கள் பிரச்சினையை திசை திருப்ப வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுவிட்டு, சொல்லுங்கள், என்னை அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது இருந்தாலும் எழுதித் தரவேண்டும். நீங்கள் இதுவரை சொன்னது போதும்; உட்காருங்கள். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் நீக்கி விடுவேன்.

[1980 பிப்ரவரி 6

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுப்ப விரும்புகின்ற பிரச்சனை உறுப்பினர் எழுதிக் கொடுக்கா விட்டாலும் அரசாங்கமே சேர்த்துக் கொள்ளலாம் என்பது. ஆளுநர் உரையினை ஒட்டிய விவாதத்தை நிறுத்தி வைத்து எந்தப் பிரச்சனையையும் அரசாங்கம் விரும்பினால் சேர்த்துக்கொள்ள இடம் இருக்கிறது என்ற எண்ணத்தையே வெளிப்படுத்துகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முக்கியமான பிரச்சனை, ஆகவே, இதை நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவசரம் கருதி நான் அதை நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ள முடியும், அரசு அவசியம் என்று கருதினால் அப்படி சேர்த்துக்கொள்ளலாம்.

ஆ. பேச அழைத்த உறுப்பினருக்கு முதலில் வாய்ப்பு அளிக்காதது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நான் முதலிலே ஒழுங்குப் பிரச்சனை எழுப்பினேன்; ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப என்னை அனுமதித்தீர்கள். நான் பிரச்சினை எழுப்புவதற்குள் பேராசிரியர் எழுந்தார்கள்; தாங்களும் அவரை அனுமதித்து விட்டீர்கள். கட்சியில் வேண்டுமானால் அவர்கள் பெரிய கட்சியாக இருக்கலாம்; நாங்கள் சிறிய கட்சியாக இருக்கலாம். ஆனால் முதலில் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியது நான். ஆகையால் என்னை முதலில் அனுமதித்துவிட்டு, அதற்குப் பின்னால் பேராசிரியரை அனுமதித்திருக்க வேண்டும். இதுபற்றி தங்களுடைய தீர்ப்பைத் தெரிந்த பிறகுதான் மேற்கொண்டு (குறுக்கீடுகள்) நான் பேசுவேன். நான் தலைவரைப் பார்த்து கேட்கிறேன்; மற்றவர்கள் குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் என்னைப் பார்த்து பேசுகிறார். என்னைப் பார்த்து கேட்கின்ற உறுப்பினருக்கு நான்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, மற்ற உறுப்பினர்கள் அல்ல. திரு. ரகுமான்கான், திரு. புருஷோத்தமன் நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். சும்மா உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள். (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.